'Hume and Whittlesea மருந்தகத் தள்ளுபடித் திட்டம்' (Hume and Whittlesea Pharmacy Waiver Program)
Whittlesea Community Connections
Shop 111, Pacific Epping, 571-583 High Street, Epping, Vic 3076
|தொலைபேசி: 0437 458 520 | மின்னஞ்சல்: Pharmacywaiver@cabrini.com.au

## 'Hume and Whittlesea மருந்தகத் தள்ளுபடித் திட்டம்' (Pharmacy Waiver Program)

### இந்தச் சேவை, Whittlesea Community Connections Epping-உடன் இணைந்து கூட்டாக நடாத்தப்படுகிறது

### எமது சேவை:

அத்தியாவசிய மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வருமானம் இல்லாத புகலிடம் தேடும் மக்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதை இந்த Hume and Whittlesea Pharmacy Waiver Program இலக்காகக் கொண்டுள்ளது.

### யார் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தலாம்?

நீங்கள் பின்வருவோரில் ஒருவரானால், 'மருந்தகத் தள்ளுபடித் திட்டத்'திற்கு நீங்கள் தகுதியுடையவராகலாம்:

- இணைப்பு விசாவில் (Bridging Visa) புகலிடம் தேடும் ஒருவர்
- Whittlesea அல்லது Hume நகரத்தில் வசிப்பவர்
- உங்களது அத்தியாவசிய, சிபாரிசுசெய்யப்பட்ட மருந்துகளைப் பெற்றுக்கொள்ள உதவி தேவைப்படுபவர்
- ஒழுங்கான வருமானம் இல்லாதவர்
- SRSS பணக்கொடுப்பனவுகள் ஊடாக ஆதரவைப் பெற்றுக்கொள்ளாதவர்

**துரதிஷ்டவசமாக, அத்தியாவசியமற்ற அல்லது வைத்தியரால் பரிந்துரைக்கப்படாத மருந்துகளுக்கு எம்மால் நிதியுதவி அளிக்கமுடியாது.**

### தகுதியடைவதற்கான சான்று:

சேவைபெறுநர்கள் எமது திட்டத்திற்கு தகுதியுடையவர்களாவென்பதை நிச்சயிப்பதற்கு அவர்களைப்பற்றிய சில தனிப்பட்ட தகவல்கள் மற்றும் ஆவணங்கள் எமக்குத் தேவைப்படுகின்றன. ஒரு சிபாரிசுப் படிவம் (உங்களுடைய விடயப் பணியாளரால் (case worker) அல்லது எமது தள்ளுபடித்திட்ட ஒருங்கிணைபாளரால் பூர்த்திசெய்யப்பட்டது), உங்களுடைய விசா ஆவணத்தின் பிரதி, அத்துடன் வங்கி அறிக்கைகளின் பிரதி ஆகியவை இதில் அடங்கும்.

### எங்களை எவ்வாறு கண்டறிவது:

ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட நேரடிச் சந்திப்பு: எப்பிங் (Epping)-இல் இருக்கும் Whittlesea Community Connections- இல் வியாழக்கிழமைகளில் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை.
முகவரி: இந்த அலுவலகமானது 'பசிஃபிக் எப்பிங்' (Pacific Epping)-க்கு வெளிப்பக்கமாக அமைந்துள்ளது: **கடை 111**, **571-583 High Street, Epping.**

அல்லது

கைபேசி அல்லது மின்னஞ்சல் சேவை: வியாழக்கிழமைகளில் காலை 9 மணி - மாலை 5 மணி, மேலும் வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி - மாலை 12 மணி.
விபரங்கள்: Pharmacywaiver@cabrini.com.au அல்லது **0437 458 520**-இல் எங்களைத் தொலைபேசியில் அழைக்கலாம்.

உங்களுக்கு ஓர் உரைபெயர்ப்பாளர் தேவையானால், தயவுசெய்து உங்களுடைய பெயர், உங்களுடைய தொடர்பு இலக்கம் மற்றும் நீங்கள் விரும்பும் மொழி போன்றவற்றைப் பதிவிடுங்கள். இயன்றளவு விரைவாக ஓர் உரைபெயர்ப்பாளருடன் உங்களை நாங்கள் மீண்டும் அழைப்போம்.

### மேலதிகத் தொடர்புத் தகவல்:

நீங்கள் Whittlesea Community Connections-ஐ நேரடியாகத் தொடர்புகொள்ள வேண்டுமானால், தயவுசெய்து 9401 6666-ஐ அழையுங்கள்.